REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 3௳ வியாழன் (16—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 4௳ வெள்ளி (17—5—57) இதழ் [289

ரூ. 6-இலட்சம் செலவில் வாக்குப் பதிவு வசதி

★

புதுடில்லி, மே 15—

மக்கள் சபையின் இரு மண்டபங்களிலும் தாமாகவே இயங்கும் வாக்குப் பதிவு செய்வதற்காக ரூ. 6½ இலட்சம் சர்க்காருக்குச் செலவாகியிருப்பதாக மாநிலங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மத்திய அமைச்சர் கே. சி. ரெட்டி கூறியிருக்கிறார்.

ஏழை எளியோரை தாக்கும் புதிய வரிகள்

இரயில், தபால் கட்டணம் உயர்வு

காப்பி, தேயிலை, சர்க்கரை, புகையிலை, தீப்பெட்டிகளுக்கு அதிக வரி!

ஐந்தாண்டுத் திட்டம் வரி உயர்வுக்கு காரணமாகிறது

டில்லி சர்க்கார் புதிய வரி விதிப்புகளை அறிவித்திருக்கின்றனர்.

அறிவிக்கப்பட்டுள்ள வரி விதிப்பு, மிகப் பெரும்பாலும் ஏழை—எளிய மக்களை பாதிப்பதாகவே அமைந்திருக்கிறது.

அத்தியாவசியப் பண்டங்கள் பலவற்றின் மீதுள்ள வரி விதிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய வரி விதிப்புகள் மூலம் ஆண்டுதோறும் ரூ. 77·85 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சர்க்கரை, தேயிலை, காபி, புகையிலை, மண்ணெண்ணெய் முதலிய பொருள்களின் மீதுள்ள வரி விதிப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், இரயில்வே கட்டணம், கார்டு விலை முதலியனவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

"விதிக்கப்பட்டுள்ள புதிய வரிகள் அனைத்தும் 'ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்கே' என்று நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

இந்த ஐந்தாண்டுத் திட்டம் என்பது வடநாட்டின் வளர்ச்சிக்கு மட்டுமே என்பது உலகறிந்ததே!

சர்க்கரை

சர்க்கரைக்கு 'எக்சைஸ்' தீர்வை இதுவரை அந்தருக்கு ரூ. 5·52 காசு ஆக இருந்தது; இப்போது ரூ. 11·24 காசு ஆக உயருகிறது.

தேயிலை

பவுண்டுக்கு உதிரித் தேயிலை மீது விதிக்கப்பட்டுவரும் தீர்வை 6·26 புதிய காசிலிருந்து 10 புதிய காசாக உயர்த்தப்படுகிறது.

'பாக்' செய்யப்பட்ட தேயிலை மீது பவுண்டுக்கு 18·75 காசாக இருந்தது 35 காசாக உயருகிறது.

சிமெண்டு

சிமெண்டு மீது டன் ஒன்றுக்கு விதிக்கப்பட்ட வரி ரூ. 5 ஆக இருந்தது இப்போது ரூ. 20 ஆக உயருகிறது.

காப்பி

காப்பி, புகையிலை, காகிதம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரியும் உயர்த்தப்படுகிறது.

இரயில் கட்டணம் உயர்வு

இரயில்வேயில் 30 மைல் வரை பிரயாணம் செய்வோர் 5 சதவிகிதம் கட்டண உயர்வு தர வேண்டும். 31 மைல் முதல் 500 மைல் வரை பிரயாணம் செய்வோர், 18 சதவிகிதமும், அதற்குமேல் பிரயாணம் செய்வோர் 10 சதவிகிதமும் கட்டண உயர்வு செலுத்த வேண்டும்.

கார்டு விலை உயருகிறது

ஏற்கனவே முக்காலணாவாக இருந்த தபால் கார்டு, புதிய காசு அமுலுக்கு வந்தபோது, 5 காசாக உயர்ந்திருந்தது; இப்போது 6 காசாக—அதாவது, ஓரணாவாக உயர்த்தப்படுகிறது.

'ரிப்ளை' கார்டுகள் இனி பத்து காசிலிருந்து 12 காசாக உயரும்.

உள்ளூர் கார்டுகள் மூன்று காசிலிருந்து நாலு காசாகவும், ரிப்ளை உள்ளூர் கார்டுகள் ஏழிலிருந்து எட்டு காசாகவும் உயருகிறது.

தந்திக் கட்டணம் உயர்வு

உள்நாட்டுத் தந்திகளுக்கு இனி எட்டு வார்த்தைகளுக்கு மேல் செல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கட்டணம் ஏழு காசிலிருந்து எட்டு காசாக உயர்த்தப்படுகிறது. அவசரத் தந்திகளுக்கு 14 காசிலிருந்து 16 காசாக உயர்த்தப்படுகிறது.

மண்ணெண்ணெய் வரி உயர்வு

காலன் ஒன்றுக்கு மண்ணெண்ணெய் மீது விதிக்கப்பட்டு வந்த வரி 18·75 காசிலிருந்து 20 காசாக உயர்த்தப்படுகிறது.

பெட்ரோல் வரி உயர்வு

ஒரு காலன் பெட்ரோல்மீது விதிக்கப்பட்டு வந்த வரி 98-காசிலிருந்து 125 காசாக உயர்த்தப்பட்டுள்ளது.

தீப்பெட்டி வரி

60 குச்சி தீப்பெட்டிக்கும், 40 குச்சித் தீப்பெட்டிக்கும் வரி முறையே 6 காசு 4 காசாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இறக்குமதி வரி உயர்வு

இறக்குமதி வரி விதிப்பில் ஏற்படுத்தப்படும் மாறுதல்கள் சர்க்காருக்கு ரூ. 6 கோடி சம்பாதித்துக்கொடுக்குமாம்.

உருக்குமீது வரி உயர்வு

டன் ஒன்றுக்கு உருக்கு வரி 4 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

வருமான வரி உயர்வு

இதுவரை ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் ரூ. 4,200 சம்பாதிப்பவர்கள்மீது மட்டுமே வருமான வரி விதிக்கப்பட்டு வந்தனர்; இனி ரூ. 3,000 சம்பாதிப்பவர்களும் வரி விதிக்கப்படுவர்.

கம்பெனிகள் தந்துவந்த 25-சதவிகித வருமான வரி 30 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது; அதேபோல, அவை தந்து வந்த 'கார்ப்பரேஷன்' வரி ரூபாய்க்கு இரண்டேமுக்காலணாவாக இருந்தது இனி 20 சத விகிதமாகும்.

சொத்துக்களுக்கு வரி

தனிப்பட்டவர்களின் முதல் ரூ. 2 இலட்சம் பெறுமான சொத்துக்களுக்கு வரி கிடையாது. அதேபோல, 'அவிபக்த' இந்துக் குடும்பங்களுக்கு முதல் ரூ. 3 இலட்சம் பெறுமான சொத்துக்களுக்கு வரி கிடையாது. இதற்கு மேல் உள்ள சொத்துக்களுக்கு முதல் 10-இலட்சம் ரூபாய் வரை அரை சதவிகிதமும், அதற்குமேல் அடுத்த ரூ. 10 இலட்சத்திற்கு ரூ. 1 சதவிகிதமும், எஞ்சியவற்றிற்கு ஒன்றரை சதவிகிதமும் வரி விதிக்கப்படும்.

விவசாயச் சொத்துக்களுக்கு இந்த வரி விதிப்புக் கிடையாது.

வருடத்திற்கு ரூ. 60 ஆயிரத்திற்கு அதிகமான வருமானமுடையவர்கள், அவிபக்த இந்துக் குடும்பங்களின்மீதும் வரி விதிப்பு உண்டு.

90 வரிகள்

புதிய வரவு-செலவுத் திட்டப்படி 90 பொருள்கள்மீது வரி விதிப்பு அதிகரிக்கப்படுகிறது.

'ஏழை மக்கள்மீது வரிச் சுமையை அதிகரித்திருக்கிறேன்'

நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஒப்புதல்

புதுடில்லி, மே. 15—

சாதாரண ஏழை எளிய மக்கள்மீது அதிக வரிச்சுமையைச் சுமத்தியிருக்கிறேன் என்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் நான் அவற்றைப் பரவலாக்கி யிருக்கிறேன்.

"என்றாலும் இன்னும் எனது வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை இருக்கிறது; எனவே, மக்களின் வாங்கும் சக்தியைதான் அதிகப்படுத்துவதற்கில்லை"

என்று, வரி விதிப்பின் நோக்கங்கள் பற்றிக் கூறுகையில், நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி குறிப்பிட்டிருக்கிறார்.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

1957-58-ம் ஆண்டில் உத்தேச வருமானம் ரூ. 634·97 கோடி என்றும்; செலவு ரூ. 668·09 கோடி என்றும், எனவே, துண்டு விழுவது ரூ. 33·12 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

புதிய வரிவிதிப்பின் மூலம் ரூ. 77·85 கோடி கிடைக்குமாதலால், துண்டுவிழும் தொகையும் சரிக்கட்டப்பட்டு உபரி ரூ. 34·73 கோடி இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் பிறகு, முதலீட்டு வகையில் (இரண்டாம் திட்டத்திற்காக) ரூ. 367·89 துண்டு விழுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தண்ணீர்போல் சாராயம் வீதிகளில் ஓடியதாம்!

நகரசபைத் தேர்தல் திருவிளையாடல் குறித்து பம்பாய் மேயர்

"மதுவிலக்கு அமுலில் இருக்கும் இந்த நாட்களில் தேர்தலின்போது சாராயம், தண்ணீர்போல தெருவெல்லாம் ஓடியது; வாக்காளர்கள், ஓட்டுச் சாவடிகளுக்குச் செல்வதற்கு போக்குவரத்து வசதி செய்து தரப்பட்டது"

என்று, பதவியிலிருந்து விலகுமுன், பம்பாய் நகர மேயர் டாக்டர் சைமன் பெர்னாண்டஸ் நகரசபைக் கூட்டத்தில் எடுத்துரைத்திருக்கிறார்.

அவர் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் இதுபோன்ற சட்ட விரோதமான செயல்கள் நடைபெற்றதைச் சுட்டிக்காட்டி, 'எதிர்காலத்திலேனும் இவை நடைபெறாது பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் ஆதிக்கம் வீழ்ந்தது!

கடந்த இரு தலைமுறைகளாக காங்கிரஸ்தான் நகரசபையில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. அந்த ஆதிக்கத்திற்கு இப்போது முடிவு கட்டப்பட்டிருக்கிறது. நடைபெற்ற தேர்தலில் சம்யுக்த மராட்டிய சமிதியைச் சேர்ந்தவர்கள் பெருவாரியாக வெற்றி பெற்றுள்ளனர்.

இந்தமுறை ஒரு இடதுசாரி மேயராகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்.

எம். வி. தோண்டே என்ற சமிதி உறுப்பினர் இம்முறை மேயராகலாம் எனக் கூறப்படுகிறது.

அந்த உறுப்பினர் எழுந்து, டாக்டர் பெர்னாண்டஸ் அவர்களை நோக்கி, தேர்தலில் கையாளப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைப்பற்றிய தமது அனுபவங்களை ஒரு அறிக்கையாகத் தருமாறும், அது எதிர்காலத்தில் பயன்படக்கூடியது என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இரக்கமில்லா டாக்டர்கள் சமுதாயத்தின் துரோகிகள்!

பம்பாய், மே 15—

"மரணப் படுக்கையில் ஒரு மனிதன் வேதனைப்படுவதையும், 'உதவி புரிய வாருங்கள்' என்று வேண்டும்போது முரட்டுத்தனமாக மறுக்கும் ஒரு டாக்டரையும் மனக் கண்முன் கற்பனை செய்து பாருங்கள். டாக்டர் தொழில் எவ்வளவு சிறப்பும், மதிப்பும் பெற்றது? அந்தத் தொழிலுக்கே டாக்டர்கள் துரோகிகள் ஆகிவிடலாமா? இரக்கமில்லாமல் டாக்டர்கள் நடந்து கொள்ளலாமா?"

என்று, வேதனை மிகுதியுடன் கடிதம் ஒன்றை 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில இதழுக்கு டிசௌசா என்பவர் எழுதியுள்ளார்.

தனது பக்கத்து வீட்டில் ஒருவர் மரணப் படுக்கையில் திண்டாடுவதைக் கண்டு, அருகில் உள்ள ஒரு டாக்டர் வீட்டுக்கு இரவு 11-30 மணிக்குச் சென்று அவரை வேண்டியபோது, அந்த டாக்டர், பிடிவாதமாக வர மறுத்து விட்டாராம்!

உண்மையான மதிப்பீடா?

ரஷ்யப் படைபலம் பற்றி அமெரிக்கத் தலைவர்

வாஷிங்டன், மே 14—

உலகிலேயே பெரிய இராணுவம் ரஷ்யாவிடம் உள்ளதென்றும், இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனியிடமிருந்ததைவிட பன்மடங்கு அதிகமான நீர்மூழ்கிக் கப்பல்களும் உள்ளனவென்றும், அணு ஆயுதங்கள், செங்குத்தாகப் பாயும் ராக்கெட்டுகள் பறக்கும் குண்டுகள் ஏராளமான அளவில் இருக்கிறதென்றும் வானொலியில் பேசுகையில் அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் தெரிவித்துள்ளார்.

பம்பாய், மே 15—

பாங்கி வட்டி விகிதம் 3½ சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. பாங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கி தரும் கடன் உதவியை இந்த விகிதத்தில் வருவிக்கப்படும்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—5—57 வியாழன்

பாகல்மேடு நாடகம்-(1)

சிற்றூர் மக்களின் குறைகளை நேருக்கு நேராகக் கேட்டறிந்து அந்த இடத்திலேயே உடனுக்குடன் களைந்தெறியப் போவதாக முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டிருந்தார். அதுவுமன்றி மக்களின் தேவைகளை நேரடியாகக் கேட்டறிந்து, அப்பொழுதே அத்தேவைகளைப் பூர்த்தி செய்யப்போவதாகவும் அம்முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

இவ்வாறு அவர் அறிவித்திருந்ததின் நோக்கமே, மக்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தை இல்லாமல் செய்வதற்கேயாகும். அதாவது, அரசாங்க அலுவல்களில் கையாளப்பட்டுவரும் 'சிகப்பு நாடா முறை'க்கு முற்றுப்புள்ளி வைக்கவே, தாம் மக்களை நேரடியாக அணுகி பரிகாரம் தேடப் போவதாக அவர் கூறி இருந்தார்.

அவர் மேற்கொள்ளப் போவதாகக் கூறிய புதுமுறைக்கு, மற்றொரு விளக்கத்தையும் அவர் தந்திருந்தார். அதாவது, தங்கள் தேவைகளை உணர்ந்து, விவாதித்துத் துணிந்து வெளியிடக்கூடிய உணர்வை சிற்றூர் மக்களிடம் உணர்த்துவதற்காகவும், தாம் அம்முறையை செயலாற்றப்போவதாகவும் அவர் விளக்கம் தந்திருந்தார்.

தாம் சொல்வதை நடைமுறைக்குக் கொண்டுவர முதல் முதலாக திருவள்ளூர் தாலுக்காவிலுள்ள, வட்டார அபிவிருத்தி ஏற்பாட்டிற்குட்பட்ட ஊத்துக்கோட்டை பிர்காவைச் சேர்ந்த பாகல்மேடு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்விடத்திற்கு அரசாங்க தளபதிகளுடனும், சொந்த காங்கிரசு கட்சி தளபதிகளுடனும் முதலமைச்சர் காமராசர் சென்றார். கொம்பு, தாரை, தப்பட்டையுடன் முதலமைச்சரையும், புடைசூழ சென்றிருந்த படைவரிசையையும் அப்பகுதி மக்கள் வரவேற்று உபசரித்தனர்.

நவீன கொலுமண்டபம் ஏற்பாடாயிற்று. முதலமைச்சர் நடுநாயகமாக அமர்ந்தார். சென்னை அரசாங்க பெரிய அதிகாரி பக்கலில் அமர்ந்தார். மாவட்ட அதிகாரியும் உடனிருந்தார். அவரிலிருந்து கிராம மணியக்காரர் வரையில் அடங்கியுள்ள அதிகாரிகள் அனைவரும் முதலமைச்சருக்குப் பக்கபலமாக நின்றிருந்தனர்.

பாதுகாப்புப் படை வரிசையும் தேவைக்குக் கூடுதலாக இருந்தது என்று சொல்லத் தேவையே இல்லை. காங்கிரசு சிறிய பெரிய தலைவர்களும் கூடி இருந்தனர் என்பதும் சொல்லாமலே தெரிந்துகொள்ளக்கூடியதாகும்.

கிராம மக்களின் குறைகளை, நாட்டின் முதலமைச்சர் கேட்டறியும் நேரம் நெருங்கிற்று. முன்கூட்டியே திட்டமிட்டிருந்தபடி, ஒன்று இரண்டு என்ற வரிசைக்கிரமமாக கிராமத்தினர் தம் தம் தேவைகளையும் குறைகளையும், முதலமைச்சருக்கும், அவரைச் சூழ்ந்திருந்த அதிகாரிகளுக்கும் செவிபடும்வண்ணம் எடுத்து இயம்பினர். இப்படி ஐம்பது நபர்கள் வரை, தம் தம் கருத்துக்களை அறிவித்துள்ளனர்.

அவர்கள் குறிப்பிட்டவைகளில் சிலவற்றை 'சுதேசமித்திரன்' இதழில் கண்டபடி இதன் கீழ் குறிப்பிடுகிறோம் :—

பின்னர் பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 50 பேருக்கு மேல் அவரவர் குறைகளை எடுத்துக் கூறினர். ரோடு வசதி, பள்ளிக்கூட வசதி, குடிநீர் வசதி தேவை என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

'இலஞ்சப் பேய் தாண்டவமாடுகிறது; அதை ஒழிக்க வேண்டும்' என்று ஒருவர் கேட்டுக்கொண்டார்.

'நான்கு கிராமங்களுக்கு ஒரு மருத்துவ விடுதி அமைக்க வேண்டும்' என்று, கன்னிகைப்பேர் பிர்க்கா தாலுக்கா போர்டு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சேத்துப்பாக்கம் கிராமத்திலிருந்து சென்னைக்கு பஸ் வசதி வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

பூதூர் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், ஆரணியாறு திட்டத்தால் தமது ஊர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 கொடுப்பவர்களுக்கு மட்டும் மனை வாழ்வுக்கு மனை ஒதுக்கப்படுவதாயும், இதைப் பாதிபாக நிர்ணயம் செய்து நிலம் ஆர்ஜிதம் செய்து தருமாறும் கேட்டுக்கொண்டார். குடும்பத்துக்கு 5 செண்ட் வீதம் தருமாறு கோரினர். ஆரணியாறு திட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலமில்லாதவர்களுக்கு ரொக்க மானியம் தருமாறும் கோரப்பட்டது. கால்நடை மேய்ச்சலுக்காக நாகலாபுரத்தில் ஆயிரம் ஏக்கர் ஒதுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்த வட்டாரத்திற்கு ஜப்பானிய முறை சாகுபடி இலாபமில்லை. ஆதலால் அதை விட்டு விட்டதாக ஒரு விவசாயி கூறினார். இந்த சாகுபடிக்குத் தேவையான பசுந்தாள் உரம், காடுகளிலிருந்து கொண்டுவர வசதியளிக்க வேண்டுமென்றார்.

அதற்கு முதலமைச்சர் கூறியுள்ள பதிலையும் அதே 'சுதேசமித்திரன்' வெளியிட்டிருக்கிறது. அவ்விதழில் கண்டபடி அப்பதிலையும் இங்கு தருகிறோம் :—

"நான்கு மணி நேரமாக பொறுமையுடனிருந்து நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டதைப் பாராட்டுகிறேன். கிராமக் குறைகளைச் சொன்னார்கள். முக்கியமாக பாதை அமைப்பது, குடி தண்ணீர் வசதி ஒவ்வொரு கிராமத்துக்கும் தேவை என்று சொன்னார்கள். விவசாய அபிவிருத்தி தேவை என்றனர். சிலர், காலதாமதம் பற்றிக் கூறினர். சிலர், தங்கள் பிரதேசத்தில் 'சர்வே' செய்வதில் சிலருக்கு மட்டும் செய்ததாகப் புகார் கூறப்பட்டது; இதை விசாரிக்கிறேன்.

"சாகுபடி செய்யும் நிலம் சொந்தமில்லை என்று சொல்லமுடியாது. 'சர்வே' செய்யாததால் கடன்பெற முடியவில்லை. 'சர்வே' செய்வது அரசாங்கப் பொறுப்பு. தாமதமேற்பட்டால் அதற்காகக் கடன் தராமலிருக்கக் கூடாது. கடன் தர ஏற்பாடு செய்யவேண்டும். சொற்ப தொகைதான் கடன் கேட்கிறார்கள்; கொடுப்பதில் தவறில்லை. 'சர்வே' செய்தால்தான் கடன் தரலாமென்று உத்தரவு இருப்பதால் கடன் தர அதிகாரிகள் மறுக்கிறார்கள். 'சர்வே' செய்யாத நிலங்கள் மீதும் கடன் தருவதுபற்றி ஆலோசிக்கப்படும்; ஆனால் பணம் திரும்பி வருமா என்பதைக் கவனித்துத்தான் தரமுடியும்.

"கிராமங்கள் அபிவிருத்தி குறித்து 700 மனுக்கள் கலெக்டரிடமிருந்து வந்துள்ளன. 19-ந் தேதி சைதாப்பேட்டை கலெக்டர் ஆபீசில் மீண்டும் கூட்டம் நடத்தி ஜில்லாவில் உள்ள சமுதாய நலத் திட்ட அதிகாரிகளுடன் ஒன்றிரண்டு நாட்கள் விவாதிக்கப்போகிறேன். அவர்களுடைய சிரமங்களை அறிவதற்கு ஆசைப்படுகிறேன். திட்டங்களில் எவை சாத்தியமென்பதை பரிசீலிக்கப்படும்."

மனித சமுதாயத்தின் அழிவிற்கான விஞ்ஞானம்

அணு ஆயுத விஞ்ஞானிகளைக் கண்டிக்கிறார் டாக்டர் ராமன்

பெங்களூர், மே 13—

"[illegible] விஞ்ஞானிகள் [illegible] வருகின்றனர். [illegible] அறிவோ [illegible] இருப்பதாகத் தெரியவில்லை. மக்களைப் பெருமளவில் அழிப்பதற்கு அவர்கள் ஆயுதம் தயாரிப்பதைவிட வேறு வேலைப் தேடிக்கொள்ளலாம்,"

உலகப் புகழ் பெற்றவரும் நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் இராமன், இங்குள்ள மகாபோதி சங்கத்தில் பேசுகையில் அணு ஆயுத விஞ்ஞானிகளைக் கண்டித்துள்ளார்.

சென்னை நகரில் தண்ணீர் விநியோகம்

வேகமும் காலமும் அதிகரிக்கிறது

சென்னை, மே 14—

இப்போது, சென்னை நகரில் நாள் தோறும் 270 இலட்சம் காலன் தண்ணீர் விநியோகிக்கப் பட்டு வருகிறது; கோடை காலத்தை முன்னிட்டு இப்போது 300 இலட்சம் காலன் தண்ணீர் விநியோகிக்கப்படுமாம்.

[illegible] தண்ணீரின் வேகமும், காலமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாம். இதனால் குறைவாகக் கிடைக்கும் பகுதிகளில் தண்ணீர் அதிகம் கிடைக்குமாம்.

இப்போது புழலேரியில் 43·22 அடி தண்ணீர் இருக்கிறது.

எவ்வளவு தெரியுமா ?

புதுடில்லி, மே. 15—

1957—58-ம் ஆண்டில், தாம்பரம்—விழுப்புரம் மின்சார இரயில் பாதை விஸ்தரிப்பு வேலைக்கு ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 1 கோடியே 40 இலட்சமாகும்.

[illegible] பேட்டையிலிருந்து [illegible] பாதையை விஸ்தரிக்க ரூ. 51 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம் பிரிவில் பாதையை இரட்டிக்க சுமார் ரூ. 1¼ கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரச்சினை முடிந்துவிட்டது என்று கூறும் மந்திரிகள் கவனத்திற்கு :

'சந்திரகிரி பகுதியை மைசூருடன் இணைக்கவேண்டும்'

கேரள எம். எல். ஏ. கோரிக்கை

முதன் மந்திரி ஒப்பியுள்ளதாகத் தகவல்

திருவனந்தபுரம், மே 13—

கேரளத்தில் சந்திரகிரி ஆற்றுக்கு வடக்கே உள்ள மக்கள், தங்கள் பகுதி மைசூர் மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் கிளப்பியுள்ளனர்.

கேரளத்தில் உள்ள மஞ்ஜேஷ்வர் தொகுதியிலிருந்து போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட உமேஷ்ராவ் என்ற எம்.எல்.ஏ. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளதுடன், கேரளத்தில் உள்ள எல்லாக் கட்சியினரும் இதற்கு ஒப்புவதாகக் கூறியுள்ளார்.

முதன் மந்திரி நம்பூதிரிபாத் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சிதந்த உறுதிமொழிகளைக் காப்பாற்றும் என்றும், கட்சி, சந்திரகிரிக்கு வடக்கேயுள்ள பகுதி மைசூருடன் இணைக்கப்படுவதை எதிர்க்கவில்லை என்றும், எனவே, தகராறுக்குரிய இந்தப் பிரதேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு மத்தியஸ்தம் செய்து கொள்ளத் தயார் என்றும் கூறியிருப்பதாக உமேஷ் ராவ் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ், பி. சோ. கட்சியினரும் இந்தக் கோரிக்கையை ஆதரிப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

நிலமற்றவிவசாயிகளுக்கு கடும் எச்சரிக்கை

அரசாங்க நிலத்தை ஆக்கிரமிக்கக் கூடாது

திருவனந்தபுரம், மே 14—

கடந்த ஏப்ரல் மாதம் 27-ந் தேதிக்குப் பிறகு அரசாங்க நிலங்களை ஆக்கிரமிப்பது கூடாது என்றும், அவற்றில் அத்துமீறிப் பிரவேசித்திருப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமென்றும் கேரள அரசாங்கம் எச்சரித்திருக்கிறது.

"சாகுபடி செய்ய விரும்பும் நிலமற்ற விவசாயிகளுக்கு புறம்போக்கு நிலத்தை விநியோகம் செய்ய வேண்டுமென்றுதான் சர்க்கார் விரும்புகிறது; இது குறித்து விரைவில் முடிவும் செய்யப்படும். இதனிடையில் உத்தரவின்றி நிலங்களில் பிரவேசிப்பதால் சர்க்கார் உத்தேசம் நிறைவேறாமல் போய்விடும்" என்று சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவி

திருவனந்தபுரம், மே 14—

ஏழைகள் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து, நீதி ஜனநாயகத்தைத் தழைக்கச் செய்ய இலவச சட்ட உதவியளிப்பதற்கான திட்டமொன்றை கேரள அரசாங்கம் யோசித்துவருகிறதாம்.

'துவக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் இந்த இலவச சட்ட உதவியளித்து, பிறகு அதன் தன்மைகளை அறிந்து, பொதுவர்க்க ஏழை மக்கள் அனைவருக்குமே இத்திட்டம் விரிவு படுத்தப்படும்' என்று கேரள அரசாங்க சட்ட அமைச்சர் கிருட்டிணன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உற்பத்தி நிலை

புதுடில்லி, மே. 14—

இந்த ஆண்டில் அரிசி உற்பத்தி 2 கோடியே 81 இலட்சம் டன் என்றும், கோதுமை உற்பத்தி 80 இலட்சம் டன் என்றும், மத்திய உணவு அமைச்சர் ஜெயின் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

அந்தகர்களுக்கு ரயில் பிரயாணச் சலுகை

காச நோயாளிகளுக்கும் கிடைக்கும்

புதுடில்லி, மே 14—

குருடர்களைத் துணை ஆள் ஒருவருடன் ஒரே ஒரு டிக்கெட்டில் பிரயாணம் செய்வதற்கு இந்திய இரயில்வேக்கள் அனுமதிக்கும் என்று மத்திய இரயில்வே மந்திரி ஜெகஜீவன் ராம் மக்கள் சபையில் இன்று இரயில்வே வரவு-செலவு திட்டத்தைத் தாக்கல் செய்து பேசுகையில் அறிவித்தார்.

இச்சலுகை நாட்டிலுள்ள சகல குருடர்களுக்கும் பிரயோகமாகும்.

தற்போது இந்தச் சலுகை, அங்கீகாரம்பெற்ற நிறுவனங்களின் பராமரிப்பிலுள்ள குருடர்களுக்கு மட்டுமே பயன்படும்.

இதுபோன்ற சலுகை, க்ஷய ரோகத்தால் பிடிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் தரப்படுகிறதென்றும், அவர்கள் மருத்துவமனைகள் அல்லது சுகவாச நிலையங்கள் ஆகியவைகளில் சேருவதற்காகச் செல்லும்போதும், அவைகளிலிருந்து திரும்பிச் செல்லும்போதும் இச்சலுகை கிடைக்கும்.

ஆனால், இதற்குரிய அத்தாட்சிப் பத்திரங்களை அவர்கள் காண்பித்தால்தான் இச்சலுகை அளிக்கப்படும். சலுகை துஷ்பிரயோகமாகாமல் தடுப்பதற்காகவே இந்த நிபந்தனை.

பொதுவாக இரயில்வே சலுகைகள் பற்றி அமைச்சர் கூறியதாவது :—

"இப்போது நிலவி வருகிற இரயில் நெருக்கடி சூழ்நிலையிலும், அதிக வருமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டியிருக்கும் நிலையிலும் பிரயாணிகள் போக்குவரத்து விஷயத்தில் அளிக்கப்படுகிற சலுகைகளைக் குறைக்கவேண்டும் அல்லது வாபஸ் பெற வேண்டுமென்று இந்தச் சபையிலும் இதர இடங்களிலும் வற்புறுத்தப்பட்டு வந்தபோதிலும், ஆப்போது இருந்துவருகிற எந்தச் சலுகையையும் ரத்துசெய்ய நான் தற்போது உத்தேசிக்கவில்லை."

உங்கள் குறிப்புக்கு!

கடந்த மார்ச் திங்களில் இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரயில்வே வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு வருமாறு :—

வருமானம் : 368·50 கோடி
செலவு : 289·16 கோடி
நிகர மிகுதி : 21·43 கோடி

1956—57-ம் ஆண்டில்—

வருமானம் : 350 கோடி
செலவு : 229·34 கோடி
நிகர மிகுதி : 26·95 கோடி
ஆகும்.

அமுலாகும் நாள் !

கிராமங்களில் குடியிருப்பவர்களிடையே இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைப் பரப்ப ரூ. 250 முதல் ரூ. 1,000 வரை புதிய 'சனதா' பாலிசி திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதல்லவா ?

இம்மாத இறுதிக்குள் இந்தத் திட்டம் சென்னை நகரத்திலும், கோவை நகரில் ஜுன் முதல் வாரத்திலும் ஆரம்பிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் ஜுன் 2-ந் தேதி துவக்கப்படக்கூடும் என்று தெரியவருகிறது.

கழகச் செய்திகள்

சென்னை 45-வதுவட்டம்

28—4—57-ல் சென்னை 45-வது வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் கோ. செங்குட்டுவன் முன்னிலையில் நடைபெற்றபோது தோழர்கள் டி. தம்பித்துரை செயலாளராகவும், சி. சு. இராசன் துணைச்செயலாளராகவும், ந. வேதாசலம் பொருளாளராகவும், இரத்தினவேலு—காசிசாமி ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் 21 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 35-வது வட்டம்

28—4—57-ல் சென்னை 35-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ந.செயராமன் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் சு. நெடுமாறன் செயலாளராகவும், வி. பி. தரணி துணைச்செயலாளராகவும், இரா. ஆனந்தன் பொருளாளராகவும், 3 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—ஏரிக்கரை

18—4—57-ல் சென்னை—ஏரிக்கரையில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்குப் பாராட்டுப் பொதுக்கூட்டம் தோழர் ந. ரா. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சே. மு. காதர், சம்பந்தம், இரா. சடகோபன் ஆகியோர் பேசியபின் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி நன்றி கூறினர்.

சென்னை—சூளை

14—4—57-ல் சென்னை-சூளை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 3 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 14-வதுவட்டம்

28—4—57-ல் எண் 43, பந்தர் தெருவில், தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, வரவு—செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், பொதுச்செயலாளர் தேர்தல் வழக்கு நிதி தருவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், மற்றும் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

முரப்பாநாடு:

16—4—57ல், முரப்பநாடு தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் சு. அப்பாவு அவர்கள் தலைமையில் நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடலூர்:

17—4—57-ல், கடலூரில் ஓர் மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தி.மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை தாங்க, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணு, மு. கருணாநிதி, க. அன்பழகன் ஆகியோர் தி. மு. கழக வெற்றிகளைப்பற்றியும் அதன் சனநாயகப் பண்பு குறித்தும் சிறப்புரையாற்றினர்கள். தோழர் சி. கோவிந்தராசன் நன்றி கூறினர்.

கீழ்முகம்:

18—4—57ல், ஆவணிப்பேரூர் கீழ்முகம் கிராமத்தில் தி. மு. கழகக் கிளை அமைப்புக்கூட்டம் போடிநாயக்கன்பட்டியில் இரா. தாண்டவன் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் ஏ. கே. பெரியண்ணன், செயலாளராகவும், ப. இராமன் துணைச்செயலாளராகவும், வி. சிரங்கன் பொருளாளராகவும், கு. முனியன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆழ்வார்கற்குளம்:

16—4—57ல், ஆழ்வார்கற்குளம் கிராமத்தில் தி. மு. கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் செ. பார்வதிநாதன் செயலாளராகவும், ஆ. தாயப்பன் துணைச்செயலாளராகவும், பத்ரன் பொருளாளராகவும், எம். எஸ். முத்து மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அறந்தாங்கி:

19—4—57ல், தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு அறந்தாங்கி தி. மு. கழகத்தினரால் ஓர் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. அன்று மாலை 6-30 மணிக்கு கழக உயர்நிலைப் பள்ளியில் தோழர் க. அன்பழகன் அவர்கள் 'குறள் நெறி' எனும் பொருள் பற்றிப் பேசினர்.

திண்டுக்கல்:

14—4—57ல், திண்டுக்கல் தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது சு. வேலாயுதம் தலைமை தாங்க, தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், எ. சுப்பையா முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

இகிரனூர்:

18—4—57ல், இகிரனூர் தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெற்றபோது இரா. நாராயணன் தலைமை தாங்கினர். தோழர் தி. கோ. சிங்காரம் திறந்துவைத்தார்; பின்னர் தோழர்கள் இரா. மாணிக்கம், என். வி. நடராசன் பேசினர்.

திருவனந்தபுரம்:

28—4—57ல், திருவனந்தபுரம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் டி. வி. சிவம் செயலாளராகவும், கே. எச். எம். சுபேர், கே. சுப்பராயலு பொருளாளர்களாகவும், ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சாத்தான்குளம்:

21—4—57-ல், சாத்தான்குளம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் நா. கு. பெ. நடராசன் தலைமையில் நடைபெற்று வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டும்கூட்டம்நடத்துவது பற்றியும் தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

சன்னுநல்லூர்:

21—4—57-ல், சன்னு நல்லூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் வி. சுப்பிரமணியம் செயலாளராகவும், பி. சம்பந்தம் துணைச் செயலாளராகவும், மு. குழந்தைவேல் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பூர்:

20—4—57-ல், திருப்பூர் 16, 17-வது வட்டத் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் இரா. செகநாதன் செயலாளராகவும், 11 பேர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிருவைகுண்டம்:

2—4—57-ல், சிருவைகுண்டம் தி. மு. கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் தோழர் மு. வை. ஆழ்வார் தலைமையில் நடைபெற்றபோது 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கல்லார் எஸ்டேட்:

கல்லார் எஸ்டேட் தி. மு. கழகச் சார்பில், வெற்றி பெற்ற தி. மு. கழகத் தோழர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் ஆனைமலை, மயில்சாமி, ஜெபக்கனி, மருதமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குடந்தை:

22—4—57-ல், குடந்தை தி. மு. கழகச் சார்பில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் அறிவுடைநம்பி, சின்னத்தம்பி, தர்மன் ஆகியோர் பேசியபின், அன்பழகன் அவர்கள் நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர்.

புதுக்கோட்டை:

21-4-57-ல், புதுக்கோட்டை நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் எஸ். வி. சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது 4 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகாதேவி:

20—2—57-ல், மகாதேவி (முசிறி வட்டம்) தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் ம. க. சுவாமிநாதன் செயலாளராகவும், மு. மருதமுத்து துணைச் செயலாளராகவும், அ. பெரியசாமி பொருளாளராகவும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென்திருப்பேரை:

20—4—57-ல், தென் திருப்பேரை தி. மு. கழக 6-வது ஆண்டு விழா தோழர் சங்கரசு தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் வை. அன்னமலை, கே. எஸ். பன்னீர்செல்வம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

சிதம்பரம்:

7—4—57ல், சிதம்பரம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் இரா. சக்ரவர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, கழகச் செயலாளராக க.செ. இராமசாமி; துணைச் செயலாளராக நா. மு. மாணிக்கம்; பொருளாளராக வை. சீனிவாசன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

11—4—57ல், சிதம்பரம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வெள்ளக்கோவில்

16—4—57ல் வெள்ளக்கோவிலில் தி. மு. கழகம் அமைக்கப்பட்டபோது தோழர்கள் சங்கரப்ப செயலாளராகவும், பெ. மந்திரம் துணைச் செயலாளராகவும், எஸ். ஜி. பதி - சங்கரநாராயணன் ஆகியோர் பொருளாளராகவும், மு. வே. செந்தூர் பாண்டியன் மாவட்ட பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

21—4—57ல் துவக்க விழா தோழர் மசராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. எஸ். பன்னீர்செல்வம், ஆ. அண்ணமலை மற்றும் பலர் பேசினர்

திருவைகுண்டம்

16—4—57ல் திருவைகுண்டம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் டி. துரைசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் க. நயினர் செயலாளராகவும், முத்துசாமி துணைச் செயலாளராகவும், வெ. இராமையா பொருளாளராகவும், பா. கோலப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பள்ளப்பட்டி:

18—4—57-ல், சேலம் பள்ளப்பட்டியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் பி. தீர்த்தகிரி செயலாளராகவும், பி. செகந்நாதன் துணைச் செயலாளராகவும் எஸ். ஆறுமுகம் பொருளாளராகவும், 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நடுப்பட்டி:

12—2—57-ல், நடுப்பட்டி தி. மு. கழகத் துவக்க விழா தோழர் இரா. செழியன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் காசிநாதன், சிவராஜ், பாலு ஆகியோர் பேசினர்.

ஓராசிரியர் பள்ளிகள்

சரிவர பணியாற்றுகிறநம்

'புகார்கள் ஆதாரமற்றது' என்று சர்க்கார் கூறுகிறது

சென்னை, மே 15—

சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்கவும், வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்குக் கல்வி வசதி அளிக்கவுமான நோக்கத்தில் ஓராசிரியர் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பள்ளிகள் பற்றி சமீபகாலத்தில் சட்டசபையிலும் பத்திரிகைகளிலும் குறைகள் தெரிவிக்கப்பட்டன. ஓராசிரியர் பள்ளி முறையை முற்றிலும் உபயோகமற்றதாகக் கூறுவது நியாயமாகாதென்றும் கிராமங்களில் பள்ளிகளைத் திறப்பட நடத்தப் பெரும் பாடுபடும் ஏராளமான இளைஞர்களின் முயற்சிக்கும் உகந்ததாகாது என்றும் அரசாங்கம் உணர்கிறது. உண்மையில் இந்தப் பள்ளிகள் மிகவும் திருப்திகரமாக வேலை செய்கின்றன; பள்ளிக்கூடமே இல்லாதிருந்த பல கிராமங்களின் தேவைகளை இவை பூர்த்தி செய்கின்றன.

'ஓராசிரியர் பள்ளிகள் பெயரளவுக்குத்தான் இருக்கின்றன; அவை சரியாக வேலை செய்வதில்லை,' என்பது, கூறப்படும் குறைகளில் ஒன்ருகும். இந்தப் பள்ளியின் ஆசிரியர் விடுமுறை எடுத்துக்கொண்டாலும் அல்லது வேறு வேலையாகச் சென்ருலும் அந்தக் காலத்தில் பள்ளி மூடப்படத்தான்வேண்டும்; வேறு வழி கிடையாது; ஆகவே, இதைக் கொண்டு பள்ளி சரியாக நடைபெறவில்லை என்று சொல்ல முடியாது.

1954—55-ல் 2,581 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டன; அவற்றில் 1,243 பள்ளிகளில் அதிகப்படியான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1955—56-ல் மேலும் 1,500 ஓராசிரியர் பள்ளிகள் நிறுவப்பட்டன; அவற்றிலும் பல, இரட்டை ஆசிரியர் பள்ளிகளாக மாறிவிட்டன.

அரசாங்கக் கல்வித் துறையினர் எடுத்துக்கொள்ளும் அக்கறை தவிர, கிராம மக்களே இப்பள்ளிகள் சரிவர நடைபெற பெரும் முயற்சி எடுத்துக்கொள்கின்றனர்

திட்டமிட்ட அடிப்படையில், பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கத் தேவையான செலவுத் தொகை வழங்கப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பது கூறப்படும் மற்ருெரு குறைபாகும்; இந்தப் புகாரும் ஆதாரமற்றதாகும்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சென்னை மாநிலத்தைச் சேர்ந்த கன்னியாக்குமரி மாவட்டம் நீங்கலாக உள்ள மாவட்டங்களில் 84 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன—அவற்றில் 10,000 மாணவர்களுக்கும் அதிகமாகப் பயிற்சி பெற்றனர். தற்போது 127 பயிற்சிப் பள்ளிகள் உள்ளன — 16,000 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், துவக்கத்தில் 7 இருந்தன—அவற்றில் 475 பட்டதாரிகள் பயிற்சி பெற்றனர். தற்போது 15 பயிற்சிக் கல்லூரிகளாக உள்ளன—1,200 பட்டதாரிகள் பயிற்சி பெறுகின்றனர்.

இதே காலத்தில் சமீபத்தில் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி திறக்கப் படவில்லை என்று கூறப்படுவதும் சரியல்ல; சென்ற ஆண்டில்தான் கோவையில் பெண்களுக்கு ஒரு அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

'அஞ்சுகம்'

28—4—57 அன்று தோழர் கண்ணதாசன் அவர்களின் துணைவியார் பெண் மகவுக்குத் தாயானுர். மகவுக்கு அஞ்சுகம் எனப் பெயரிடப்பட்டது.

நூருண்டுப் பழக்கம்

கைவிட ஒரு அமெரிக்கர் முடிவு!

சார்லஸ் ஹாமில்டன் என்ற 107 வயதான ஒரு அமெரிக்கர் தனது 107-வது பிறந்த நாளன்று புகை பிடிப்பதை நிறுத்திவிடுவதென சபதம் ஏற்றுக்கொண்டிருக்கிருராம்! தான், 7-வது வயதில் புகை பிடிக்கத் துவங்கியதாகவும், 100 ஆண்டுகள் புகை பிடித்தது போதும் என்று கருதுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிருராம்!

இரண்டணு பித்தளை நாணயங்கள்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மே 15—

இரண்டணு பித்தளை நாணயங்கள் செல்லத்தக்கவை என்றும், ரிசர்வ் பாங்கிலும், மற்ற கிளைப் பாங்கிகளிலும் அந்த நாணயங்களைக் கொடுத்து சில்லறை பெற்றுக்கொள்ளலாம் என்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அ. பொன்னம்பலனுர்

தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்கள் மூவாலூர், திருச்சி, தில்லைநகர், காரைக்குடி, மதுரை, கொடைக்கானல், பட்டிவீரன் பட்டி, புதுக்கோட்டை நகர், லால்குடி ஆகிய பகுதிகளில் நடைபெறும் வழியனுப்பு உபசார நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு 20—5—57 காலை சென்னை வருகிருர்.

21—5—57 அன்று, கப்பலில், சென்னையிலிருந்து புறப்பட்டு பினுங்கு போய்ச் சேர்ந்து, அங்கிருந்து சிரம்பான் போய்ச் சேருவார். 5—6 மாதங்களில் தாயகம் திரும்புவார்.

அவரது சிரம்பான் முகவரி:—

அ. பொன்னம்பலனுர்
'பாரதி பிரஸ்', சிரம்பான்
(மலாயா)

சித்த மருத்துவ மாநாடு

சென்ற 12—5—57 மாலை தாசர்புரம் சித்தவைத்தியக் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி கழகச் செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாண்டு சித்த மருத்துவ மாநாட்டை சென்னை நகரிலேயே ஜுன் திங்கள் 29, 30-ந் தேதிகளில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் சம்பந்தமான விவரங்களுக்கு, 'செயலாளர், மத்திய சித்த வைத்திய கழகம், தாசர்புரம் (அஞ்சல்) சென்னை,' என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளுமாறும், எல்லா சித்த வைத்திய சங்கங்களும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்ப இப்பொழுதே ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள் என்று, மேற்படி கழகத் தலைவர் திரு. எச். தேவதாஸ் அறிவிக்கிருர்.

அன்பளிப்பு

26—4—57ல், அ. கொல்லப்பட்டி-புதூர் தோழர் சி. கோவிந்தன் அவர்களின் துணைவியார் தோழியர் மங்கம்மாள் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானுர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

மே தின நினைவாக, கோவை மாவட்டம் - சீகாழிப்பாறை தி. மு. கழகக் கிளையின் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

1—5—57ல், சித்தூர் தோழர் எம். சுப்பிரமணியம் அவர்களது துணைவியார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானுர்; அம்மகவுக்கு 'இளங்கோவன்' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

திபேத்திலிருந்து செஞ்சீனத் துருப்புகள் வாபஸ்!

காட்மண்டு, மே 13—

திபேத் நாட்டிலிருந்து செஞ்சீனத் துருப்புகள் படிப்படியாக வெளியேறத் துவங்கி விட்டன என்று திபேத் வட்டாரங்கள் செய்தி தந்துள்ளனவாம்.

கடந்த ஏப்ரல் திங்களில்தான், இதுபோல படிப்படியாக சீனத் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதென முடிவாகியிருந்தது என்றும், அந்தத் திட்டம் இப்போது உடனடியாக அமுல் செய்யப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

திபேத் சுதந்திரமாக இயங்குவதற்கென 1956 ஏப்ரலில் நிறுவப்பட்ட தயாரிப்புக் கமிட்டியின் ஓராண்டு விழாவின்போது இந்தத் திட்டம் உருவாயிற்றும்.

சென்னைக்குவரும் கப்பலை 'விலக்கி வைக்க' முடிவு

சென்னை, மே 16—

'எஸ். எஸ். ரஜுலா' என்ற கப்பல் பினங்கிலிருந்து 1,800 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்னை வந்துசேர்ந்தது.

கப்பலிலுள்ள பிரயாணிகளிடையே 'இன்புளுயன்சா' நோய் கடுமையாக பரவியுள்ளதால் ஐந்து நாட்களும், சென்னை துறைமுகத்திலேயே கப்பலை 'விலக்கி' வைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

விமானத்தின் மூலம் நேற்று டில்லி வந்து சேர்ந்த பிரயாணிகள் எவரும் நகரத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

செயற்கைமேகம் உருவாகுமா?

விஞ்ஞானிகள் முயற்சி

நியூயார்க், மே 14—

உலகத்திற்கு மேலே 70 மைல் உயரத்தில் ஒரு ராக்கெட்டை அனுப்பி, அங்கு ஒரு வாயுவை தானாக வெளியிடச் செய்து, இந்த வாயுவை மேகமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மேகம், ரேடியோ அலைகளைப் பிரதிபலிப்பதிலும், டெலிவிஷன் ஒலிபரப்பு வேலைகளுக்கும் மிக உதவியாக இருக்குமாம்.

இந்தச் சோதனை அமெரிக்காவைச் சேர்ந்த மெக்ஸிகோவில் இந்த கோடையில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரக் கட்டுப்பாடு உத்தரவு

இந்திய சர்க்கார் பிறப்பித்தது

சென்னை, மே 15—

விவசாயிகளுக்கு இரசாயன உரம் வழங்குவதற்கான உரக் கட்டுப்பாடு உத்தரவை இந்திய அரசாங்கம் பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவுப்படி இரசாயன உரத்தின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. உர வியாபாரிகள் ஆண்டுதோறும் லைசென்ஸ் பெறவேண்டும். தரக்குறைவான உரத்தை விற்கவோ, உற்பத்தி செய்யவோ யாரும் முற்படக் கூடாது.

இந்த உத்தரவு இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

ஒத்திவைப்பு

17—5—57 மாலை நடைபெறவிருந்த 45-வதுவட்ட (மயிலை—சித்திரகுளம் அருகில்) தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக் கூட்டம், நகரில் போலீஸ் தடையுத்திரவு' காரணமாக ஒத்திவைக்கப்பட்டதென செயலாளர் டி. தம்பிதுரை அறிவிக்கிறார்.

தில்லை—வில்லாளன்

சுற்றுப்பயணம்

மே 19 : மாயவரம் வட்டம்
20 : சிதம்பரம்

மஜீத்போன்றவர்கள் செய்த உயிர்த் தியாகம்

தி. மு. க.-விற்கு சட்டமன்றத்தில் 15 இடங்களைப்பிடித்துத்தந்திருக்கிறது

மஜீத் படிப்பகத் துவக்கவிழாவில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி முழக்கம்

10—5—57 மாலை சென்னை—மயிலை அப்துல் மஜீத் படிப்பகத் திறப்புவிழாவில் தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"தோழர் மஜீத் என்றவுடன் நமக்கெல்லாம் தேர்தலின் நினைவுதான் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. இன்று சட்டமன்றத்தில் 15 பேர் அமர்ந்திருக்கிறோம் என்றால், மஜீத்போன்றவர்கள் செய்த தியாகம் என்பதை மறக்க முடியாது. சென்ற தேர்தலில் தோழர் மஜீதை இழந்தோம்—இழக்கவைத்துவிட்டார்கள் காங்கிரசுக்காரர்கள்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 15 பேர், வெகு சாதாரணமான முறையில் சட்டசபைக்குப்போய் உட்கார்ந்துவிடவில்லை. பல அரும்பெரும் தியாகங்கள் செய்துதான் சட்டசபைக்குச் சென்றிருக்கிறார்கள். 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற நமது இலட்சிய வெற்றிக்காக, சென்ற தேர்தலின் போது தோழர் மஜீத் பாடுபட்டார்; அவர் கொல்லப்பட்டார். அவரைப்போன்ற நம்முடைய கொள்கை வீரர்கள் சுயமரியாதை இயக்கத்திலிருந்து பலியாகிக் கொண்டுதான் வருகிறார்கள். அவர்களையும்—அவர்கள் செய்த பல தியாகங்களையும் நாம் என்றும் மறக்க முடியாது.

"அந்த அளவுக்குக் காங்கிரசுக்காரர்கள் நமது தோழர்களை பழிவாங்கும் எண்ணத்தோடு அராஜக செயல்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். இந்தத் தேர்தலில் கூட உத்தமபாளையம் தொகுதியில், திரு. பி. டி. இராசன் அவர்களுக்கு தேர்தல் பணியாற்றிய தோழர் ஒருவர் தேர்தல் அலுவலகத்திலேயே கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். காங்கிரஸ் அந்த அளவுக்கு வெறி எண்ணத்தோடு சென்றுகொண்டிருக்கிறது; கொஞ்சங்கூட அச்சப்படாமல் இந்தக் காரியங்களைச் செய்துவருகிறது.

"சென்னை சட்டமன்றத்தில், கவர்னர் அவர்கள் தனது உரையில், இந்தத் தேர்தல் மிகவும் சுமுகமாக—ஒழுங்காக நடந்தது என்று குறிப்பிட்டிருந்தார். நான் விவாதத்தில் பேசும்போது அதை மறுத்து, நிலைகளை விளக்கிச் சொன்னேன். தேர்தல் எப்படி நடைபெற்றது என்பதற்கு இங்கு விளக்கிக் கூற வேண்டியதே இல்லை—அந்த அளவுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்திருக்கிறது—காங்கிரஸ்காரர்கள் அந்த அளவுக்கு ஒழுங்கீனமாக நடந்துகொண்டார்கள்!

"உண்மையிலேயே, இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டதால்தான் இப்பொழுது நாட்டில் இந்த அளவுக்கு அமைதியிருக்கிறது. எப்படியென்றால், உதாரணமாக தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியையே எடுத்துக்கொள்ளுங்கள். மைலாப்பூர் தொகுதியில்மட்டும் நாம் நமது அபேட்சகரை நிறுத்தவில்லை. பார்லிமெண்டுக்கு நிறுத்தப்பட்ட நமது அபேட்சகர் திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு திருவல்லிக்கேணி தொகுதிவரையில் ஓட்டுக்கள் அதிகமாக இருந்தது; ஆனால் மைலாப்பூர் தொகுதியை எண்ண ஆரம்பித்ததும் காங்கிரஸ்காரர் அதிகமாக உயர்ந்துவிட்டார். காரணமென்ன? நாம் இந்தத் தொகுதியில் போட்டியிடவில்லை என்பதால்தான். இந்த ஒரு தொகுதியில் நாம் போட்டியிடாததாலேயே காங்கிரஸ்காரர்களுக்கு இவ்வளவு ஏற்றமென்றால், நாம் எல்லா இடங்களிலும் போட்டியிடாமலிருந்திருந்தால் அவர்களின் ஏற்றம் எப்படியிருந்திருக்குமென்று கருதுகிறீர்கள்? அவர்களின் அடக்குமுறைகளுக்கும், அராஜகத்திற்கும் அளவே கிடையாது என்றல்லவா இருக்கும்?

"சமீபத்தில் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் தேனி-தியாகராசன் என்பவர், எல்லா உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் போது, சிலர் 'கடவுள் பெயரால்' என்ற வாக்கியத்தைச் சொல்லியும், நமது இயக்கத் தோழர்கள் 'மனப்பூர்வமாக' என்றும் சொல்லியும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்கள்; ஆனால் இந்தத் தேனி-தியாகராசன் என்பவர் மட்டும் 'மகாத்மா காந்தியின் பெயரால்' என்று சொல்லி எடுத்துக்கொண்டார்.

"இது எதைக் காட்டுகிறது? தமக்கு பெரும்பான்மையான பலம் இருக்கிறது; நாம் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் என்ற தன்னிச்சையான ஒரு காரியம் தானே? ஆனால், சபாநாயகர் அந்தத் தோழரைக் கூப்பிட்டு, மறுபடியும் சட்ட விதியின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள சொல்லியிருக்கிறார். இதில் என்ன கௌரவம் இருக்கிறது? இப்படி ஒரு கட்சியில் ஒரு உறுப்பினர் நடந்துகொள்கிறார் என்றால், அந்த கட்சியிலுள்ள 150 பேருக்கு என்ன மதிப்பு இருக்கிறது? சிந்திக்க வேண்டும் காங்கிரஸ் தோழர்கள்.

"காங்கிரஸ்காரர்கள் நாம் 15 பேர் வெற்றி பெற்றதைப் பற்றி பேசும்போது, 'இந்த 15 பேர் சட்டசபைக்கு சென்றால் என்ன செய்யமுடியும்?' என்று கேட்கிறார்கள். இவர்கள் மட்டும் எதைச் செய்துவிடுவார்கள் என்றுதான் நமக்குத் தெரியவில்லை. அவர்கள் 150 பேர் என்பதாலேயே அவர்களுக்கு மட்டும்தான் சட்டசபையில் பேச உரிமை இருக்கிறது; நாம் 15 பேர் என்பதாலே நமக்கு சட்டசபையில் பேச உரிமை கிடையாது என்று சட்டம் இருக்கிறது! அப்படி ஒன்றும் இல்லை; மக்களின் குறைகளை பேச எல்லோருக்கும் உரிமையிருக்கிறது.

"நாம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொன்னபோது, காங்கிரசுக்காரர்கள் என்ன சொன்னார்கள்? 'எங்கே இருக்கிறது திராவிடம்?—திராவிடம் கிடைக்குமா?—திராவிடமாவது ஆரியமாவது!' என்றெல்லாம் சொன்னார்கள். திராவிடம் என்ற வார்த்தையே, அவர்கள் காதில் 'நாராசம்' பாய்ச்சுவதைப் போல் அல்லவா இருந்தது? 'இப்பொழுது நமது தோழர்கள் அவை வரும் சட்டசபையில், 'வாழ்க திராவிடம்! வாழ்க திராவிடம்!' என்றுதான் தனது பேச்சை முடிக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சொல்லுவதெல்லாம் சட்டசபையின் குறிப்பேட்டில் பதிவாகித்தான் வருகின்றது. நம்மை இவர்களால் என்ன செய்யமுடியும் என்று கேட்டார்களே, இப்பொழுது அவர்கள் என்ன செய்ய முடிந்தது? என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்களே, இதுவே நாம் செய்த சாதனைதானே!

"நேற்றுவரை நாம் தெருவில் நின்றுகொண்டு 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொன்னோம்; இன்று சட்டசபையில் அதை நாம் சொல்லுகிறோம் என்றால், அதற்கு காரணமான மஜீத் போன்றவர்கள்தான் நம் கண் முன்னே தெரிகிறார்கள். இந்த அளவுக்கு நம்முடைய கொள்கைகளும்—திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சியும் இருக்கிறதென்றால், அதற்கு மறைந்த மாவீரர்களான மஜீத், உடையார் பாளையம் வேலாயுதம், தாளமுத்து - நடராசன் போன்றவர்களின் தியாகம்தான் காரணம்.

ஒரு காலத்தில் நம்மை எழுதத் தெரியாதவர்கள் என்றார்கள்; காங்கிரஸ் கட்சியிலிருப்பவர்களுக்குத்தான் எழுதத் தெரியும் என்ற நிலையிருந்தது. ஆனால், இப்பொழுது எழுதத் தெரியாதவர்கள் என்ற நிலைபோய், நமக்குத்தான் எழுதத் தெரியும் — எழுதும் திறமையிருக்கிறது என்று மாறி விட்டது. காங்கிரஸ்காரரிடமிருந்த அந்தக் கோட்டையை நாம் கைப்பற்றி விட்டோம்.

"அதேபோல, ஒரு காலத்தில் நமக்குப் பேச்சுத் திறமையில்லை என்றார்கள்; இப்பொழுது நம்மை விட யாரும் பிரச்சினைகளை விளக்க முடியாது என்ற நிலையாகிவிட்டது.

"இன்னும் சினிமாத் துறையை பாருங்கள். என் மக்கள்—நம்முடைய தோழர்கள் எழுதும் வசனங்களை மதிக்கிறார்கள்? நினைத்துப் பாருங்கள்; 10 ஆண்டுகளுக்கு முன்னால் சினிமாத் துறையில் நாம் இந்த அளவுக்கு இருந்தோமா? இப்பொழுது நம்மால் முடிகிறதென்றால் என்ன அர்த்தம்? இப்பொழுது நமது தோழர் சினிமாத் துறைக்குப் போகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? நம்மிடம்தான் அந்த அளவுக்கு ஆற்றல் இருக்கிறது—திறமை இருக்கிறது.

"இப்படி ஒவ்வொரு கோட்டையாக பிடித்துக்கொண்டிருக்கிறோம்; அவர்கள் தங்களிடமிருந்த ஒவ்வொரு கோட்டையையும் இழந்துகொண்டு வருகிறார்கள். நாளைக்கு ஒரு நாள் 'செயிண்ட் ஜார்ஜ்' கோட்டையைப் பிடிக்காமலாபோகப்போகிறோம்? நிச்சயம் பிடிக்கத்தான் போகிறது திராவிட முன்னேற்றக் கழகம்—நம்முடைய கொடியும் அங்கு பறக்கத்தான்போகிறது.

"நம்முடைய இலட்சியம் நிறைவேறக்கூடிய இலட்சியம். சிறந்த ஒரு இலட்சியத்தை வைத்திருக்கும் நம்மைப்பார்த்து, 'மக்களை நம்பாதீர்கள்' என்ற வகையில் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இந்த சட்டசபைக் கூட்டத்தில், கா. சி. க. கட்சியினர் திராவிடக் கழகம் நடத்திவரும் ஓட்டல் போராட்டம் பற்றி ஒரு அவசரப் பிரரேபணை கொண்டுவந்தனர். அதற்குப் பதிலளிக்கும் போது நிதியமைச்சர் சுப்பிரமணியம், 'ஸ்ரீமான் அண்ணாதுரை அவர்கள்கூட முதலியார் என்று வைத்துக்கொண்டார்' என்று விஷமத்தனமாகப் பேசினார். இம்மாதிரி துவேஷப் பிரச்சாரம் செய்து நம்மை அழிக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால், இம்மாதிரி துவ்ஷபிரச்சாரம் செய்யப்படுவதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்—பதில் சொல்லியும் வருகிறோம். அவர்கள் 150 பேர் இருக்கிறோம் என்ற தைரியத்தில் பேசுகிறார்கள். அவ்வளவுதானே தவிர, வேறு நம்முடைய உரிமையை அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. இந்த 150 கை தூக்கத்தான் பயன்படுமே தவிர கருத்து விளக்கம்தர பயன்படாது."

தேவபாண்டலம் தி. மு. க. செயலாளர்

கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத் தலைவராகத் தேர்வு

தேவபாண்டலம், ஏப். 14—

29—4—57-ல், தேவபாண்டலம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. தனக்கோடி அவர்கள், தேவபாண்டலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி—விற்பனை சங்கத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(ந. நி.)

கழகக் கூட்டங்கள்

★

ஓடைப்பட்டி :

வானொலித் திடல்
18-5-57 இரவு 7-30 மணிக்கு
தலைவர் : போ. வேலன்
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து
எஸ். முத்து
மா. பாண்டியன்

★

அகலரப்பாளையம்புதூர் :

17—5—57 மாலை 7-மணிக்கு
தலைவர் : பழனிசாமி
பேசுவோர்:
கோவை செழியன்
வி. கே. கலைமணி
ஆ. வீராசாமி

★

வெண்ணுங்குபட்டு :

18—5—57 மாலை 6-மணிக்கு
தலைவர் : துரை
பேசுவோர் :
என். ஜீவரத்தினம்
கே. கோதண்டம்
பி. எஸ். கோவிந்தராசு
இரா. வெங்கடேசன்

சென்னை—4-வதுவட்ட இளைஞர் முன்னேற்றமன்றஉறுப்பினர்கட்கு:

17—5—57 மாலை 7-மணிக்கு, மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம், மன்ற அறையில் நடைபெறும்; தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாராட்டுக் கூட்டம் நடத்துவதுபற்றி ஆராயப்படும்

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

18—5—57 அன்று இளைஞர் முத்தமிழ் மன்றச் சார்பில், சென்னை—பார்க்டவுன் (28-வது வட்டம்) எண் 2/2 நைனியப்ப நாய்க்கர் தெருவில், தோழர் பக்தவத்சலம் தலைமையில் தோழர்கள் கே. எம். மணி, நடராசன், தியாகராசன், வி. கே.டி. அரசு, கோதண்டன், ஜி. என். சாமி, கே. எஸ். சண்முகம் ஆகியோர் 'ஜனநாயகம்' எனும் தலைப்பில் பேசுவர்.

* * *

17—5—57 மாலை 6-மணிக்கு, பிராட்வே, எண் 4/88, 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் என். இராமதாஸ் தலைமையில் 'இன்றைய அரசியல்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

பாராட்டுக் கூட்டம்

18—5—57 அன்று தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டி, மதுரை-ஓடைப்பட்டி பாண்டியனூர் படிப்பகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர்கள் எஸ். முத்து, மா. பாண்டியன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தோழியர் சத்தியவாணிமுத்து நன்றியுரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.